## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### வெள்ளிக்கிழமை, 1973 ஆகஸ்ட் 3.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) அரசினர் தீர்மானம்

#### வினா நேரத்தை ஒத்திவைத்தல் குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்றைய முதல் அலுவல் "வினாக்கள்—விடைகள்" ஆகும். நேற்றையதினம் நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில், இன்றைய கேள்வி நேரத்தை ஒத்திவைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டபடியால், அதற்கான தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இப்பொழுது கொண்டுவருவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் 22-வது விதியின்கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள "வினாக்கள்—விடைகள்" நிகழ்ச்சியினைத் தள்ளிவைத்து அடுத்த அலுவலான "பேரவைத் தலைவர் தேர்தல்" எடுத்துக்கொள்ளலாம்".

என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

### (2) நடைமுறைக் கேள்விகள்.

#### (அ) பேரவைத் தலைவர் தேர்தலுக்குமுன் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வது குறித்து.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, I am rising on a point of order. Before you put the motion moved by the Hon. the Leader of the House to vote, I would like to get clarification from the Hon. Deputy Speaker whether the motion is for the